[1984 பிப்ரவரி 17

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, அண்டை மாநிலங்கள் என்று பார்க்கின்றபோது, பாண்டிச்சேரியை மட்டும் அண்டை மாநிலமாக எடுத்துக்கொள்வதில்லை. கேரளாவும், ஆந்திரமும், கர்நாடகாவும் இந்த மூன்றையும் பார்க்கிறோம். இந்த மூன்று மாநிலங்களுக்கும் நமக்கும் ஒரே மாதிரியாக இருக்கிறது. அதுபோலவே பாண்டிச்சேரியில் எவ்வளவு விற்பனை ஆகிறது? நம் மாநிலத்தில் எவ்வளவு விற்பனையாகிறது? 'டைவர்சன் ஆப் டிரேட்', அதாவது வியாபாரச் சந்தையில் என்ன ஆகிறது என்று கணக்கிட்டுப் பார்க்கிறோம். வியாபாரச் சந்தையில் அதிகமானால், அதற்கு ஏற்ப வரியைக் குறைக்கிறோம். பாண்டிச்சேரி மட்டும் 7 சதவிகிதம் என்பதாலேயும் மற்ற மாநிலங்களிலும் நம்முடைய மாநிலத்திலும் ஒரே மாதிரியாக இருப்பதாலும், வியாபாரச் சிதறல் மிக அதிகமாக இல்லை என்று அரசுத் துறை கணக்கு சொல்கின்றது. அதைப் பொறுத்து தேவைப்பட்டால் குறைக்கலாம்.

நாமக்கல் வட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

* 4. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. செ. முத்துசாமி சார்பில்): மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) நாமக்கல் தாலூகாவை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) & (இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 9-50)

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவரவர்களே, அப்படி தாலூகா இரண்டாகப் பிரிக்கப்படுகிறபோது, பிரிக்கப்படும் தாலூகாவிற்கு நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் பெயரையோ தீரன் சென்னிமலை, எங்கள் பகுதியைச் சேர்ந்த வீரமலை அவர்கள் பெயரையோ வைக்க அரசு ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, ஆளுநர் உரையில் செய்யப்பட்டிருக்கிற அறிவிப்புகளிலிருந்து மாவட்டங்களுக்குப் பெயர்கள் வைக்கிறபோது, எப்படிப் பெயர்கள் வைக்கிறோம் என்று உறுப்

1984 பிப்ரவரி 17]

பினர்கள் தெரிந்துகொண்டிருக்கக்கூடும். மாவட்டங்களுக்குப் பெயர் வைக்கிறபோதே, இருக்கும் பெயர்களை அப்படியே மாற்றாமல்தான் செய்திருக்கிறோம். ஆகையால், நாமக்கல் தாலுகா பிரிக்கப்படுகிறபோது, நாமக்கல் என்ற பெயர் இருக்கும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மழையினால் உடைப்பு.

* 5. வினா—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1982 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், கன்னியாகுமரி மாவட்டம், கீழ்க்குளம் ஏலாவின் இருபுறமும் பாய்கிற வாய்க்காலில் மீண்டும் உடைப்பு ஏற்பட்டதால், சுமார் இருநூறு ஏக்கரில் பயிரிடப்பட்ட பயிர் சேதமடைந்தது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

(உ) இதே இடத்தில் முதலில் எப்போது உடைப்பு ஏற்பட்டது? அது எப்போது அடைக்கப்பட்டது ?

(எ) 1982 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்த மழையின் அளவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(இ) மணல் மூட்டைகளால் உடைப்பு சரி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியை வரும் காலங்களில் வருவாய்த் துறையிடமிருந்து பொதுப் பணித் துறையிடம் ஒப்படைத்து பராமரிப்பு வேலைகளை கவனிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(உ) 1978-ல் ஏற்பட்ட உடைப்பை 1981-82 ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் சுமார் ரூ. 2.52 இலட்சத்தில் சரி செய்யப்பட்டது.

(எ) 1982ஆம் ஆண்டு அக்டோபர் 98.40 மில்லிமீட்டர் மழை பெய்துள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவரவர்களே, 1978-ல் இதே பகுதியில் உடைப்பு ஏற்பட்டது. அதை 1981-82-ல் 2.60 இலட்சம் ரூபாய் செலவு செய்து அந்த உடைப்பு அடைக்கப்பட்டது. 1982-ல் 98 மி.மீ. மழை பெய்து மீண்டும் உடைப்பு ஏற்பட்டது. முதலில் ஏற்பட்ட உடைப்பு எப்படி அடைக்கப்பட்டதோ, அப்படி அடைக்கப்பட்டும், இந்த மாதிரி மீண்டும் என் உடைப்பு